<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 02.07.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

1) மேட்டூர் நகராட்சிக்குட்ப்பட்ட பியர்ட்செல் காலனி பகுதியில் தெரு விளக்குகள் ஏதும் இல்லாததால் அப்பகுதிகளில் உள்ள மின்கம்பங்களில் தெரு விளக்கு அமைக்க உதவிப் பொறியாளர் நகர் பிரிவு, தமிழ்நாடு மின்சார வாரியம் மேட்டூர் அவர்களிடமிருந்து மதிப்பீட்டு தொகை ரூ.13710/– செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மேற்கண்ட தொகையினை வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1089 /2018/இ1)

தீர்மான எண். 104 நாள் 02.07.2018

அனுமதிக்கப்பட்டது

2) மேட்டூர் நகராட்சி பகுதியில் அரசாணை எண் 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.01.2014ன் படி பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ரூ.7308 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடைபெற்று வருகிறது. மேற்படி பாதாள சாக்கடை பணிக்காக சாலைகள் வெட்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்படுவதால் சாலைகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. ஏற்கனவே நகராட்சி சாலைகள் குடிநீர் திட்ட குழாய்கள் பதிப்பதற்காக வெட்டப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இரண்டாவது கட்டமாக பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டங்களில் முடிவுற்ற பகுதிகளில் பழுதடைந்துள்ள கீழ்கண்ட சாலைகளை புதுப்பிக்க வேண்டி தேவையான நிதி உதவியினை TURIP 2018–19 திட்டத்தின் கீழ் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கிடு மற்றும் நிர்வாக அனுமதி பெற கீழ்க்கண்ட பணிகளுக்கு திட்ட பிரேரணை அனுப்ப நகர்மன்ற தீர்மானம் தனது தீர்மான எண்.75 நாள்.15.05.2018–ல் அனுமதி அளித்துள்ளது.

பணியின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் | சிப்பம் |
|---|---|---|---|

| | | தொகை<br>(ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| 1 | மேற்கு பிரதான சாலை ஆர்.சி சர்சு ரோடு முதல் பேருந்து நிலையம் வரை தார் சாலை புதுப்பித்தல் | 68.00 | சிப்பம்– I |
| 2 | ஆர்.சி சர்சு ரோடு கிழக்கு பிரதான சாலை முதல் சர்சு வரை தார் சாலை புதுப்பித்தல் | 32.00 | |
| | மொத்தம் | 100.00 | |

மேட்டூர் நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு கோரிய பிரேரணையினை பரிசீலித்து 12.05.2018 அன்று அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற 2018–19 ம் ஆண்டின் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட அனுமதி குழுவின்படி நகராட்சி சாலைகள் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018–ல் மேட்டூர் நகராட்சிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| மேட்டூர் | 1.00 | 0.38 | 0.30 | 0.22 | 0.10 |

எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி ரூ38.00 இலட்சமும், மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி ரூ.30.00 இலட்சமும், மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி ரூ.22.00 இலட்சமும் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10.00 இலட்சத்தினை நகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2650/2018/இ1)**

**தீர்மான எண். 105 நாள் 02.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

3) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 தங்கமாபுரிபட்டிணம் பிரிவு புதிய பாலம் அருகே நான்கு முகம் கொண்ட சிறிய உயர்மின் கோபுர விளக்கினை காவேரி பாலம் அருகில் மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3423/2018/இ1)

**தீர்மான எண். 106 நாள் 02.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

4) மேட்டூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்.TN 52 W 5972 - ன் தகுதி சான்றினை புதுப்பிக்கவும் வசாகனத்திலுள்ள பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் வாகனத்திற்கு புதியதாக GPRS கருவி பொருத்தவும் ஆகும் செலவினத் தொகை ரூ.80,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3444/2018/இ1)

**தீர்மான எண். 107 நாள் 02.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

5) மேட்டூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்.TN 52 S 2041 - ன் தகுதி சான்றினை புதுப்பிக்கவும் வசாகனத்திலுள்ள பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் வாகனத்திற்கு புதியதாக GPRS கருவியினை பொருத்தவும் ஆகும் செலவினத் தொகை ரூ.70,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3418/2018/இ1)

**தீர்மான எண். 108 நாள் 02.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

6) மேட்டூர் நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண். TN 27 W 7915 - ன் தகுதி சான்றினை புதுப்பிக்கவும் வசாகனத்திலுள்ள பழுதுகளை சரிசெய்யவும் GPRS கருவி பொருத்தவும் ஆகும் செலவினத் தொகை ரூ.80,000/– ஆகும் . மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3346/2018/இ1)**

**தீர்மான எண். 109 நாள் 02.07.2018**

அனுமதிக்கப்பட்டது

7) மேட்டூர் நகராட்சிக்குட்ப்பட்ட காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள முனியப்பன் கோவில் திருவிழா ஆடி–18–ம் நாளில் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் லட்சகணக்கில் திருவிழாவிற்கு வருகை புரிந்து காவேரி ஆற்றங்கரையில் நீராடுவதால் கொளத்தூர் வழியாக மதேஸ்வரன் மலைக்கு செல்லும் பேருந்துகள் பொன்னகர் பொதுப்பணித்துறை பாலம் முதல் குள்ளவீரன் பட்டி வழியாக கொளத்தூர் மெயின் ரோடு பிரிவு வரை மாற்று வழி சாலையில் செல்ல வேண்டியுள்ளது.

மேற்கண்ட சாலைகள் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் பணிகளுக்கு வெட்டப்பட்ட நிலையில் சாலைகள் முழுவதும் மேடு பள்ளமாக உள்ளது. எனவே பேருந்து அவ்வழியாக செல்லுவதற்கு ஏதுவாக சாலைகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.3569/2018/இ1)**

**தீர்மான எண். 110 நாள் 02.07.2018**

அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகராட்சிக்குட்ப்பட்ட காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள முனியப்பன் கோவில் திருவிழா ஆடி–18–ம் நாளில் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் லட்சகணக்கில் திருவிழாவிற்கு வருகை புரிந்து காவேரி ஆற்றங்கரையில் நீராடுவதால் பொது மக்களின்

சுகாதார வசதிக்காக தற்காலிக கழிப்பறைகள் அமைக்கவும் பக்தர்கள் உடை மாற்ற தடுப்புகள் அமைமகவும், முனியப்பன் கோவில் முதல் காவேரி கரையோரம், காவேரி பாலம் முதல் ஒர்க்ஷாப் கார்னர் வரை, மேற்கு மெயின் ரோடு பொதுப்பணித்துறை அலுவலகத்திலிருந்து பூங்கா வரை நான்கு அடி குழல் விளக்குகள் மற்றும் போக்கஸ் மின் விளக்குகள் அமைத்து ஜெனரேட்டர் மூலம் மேற்கண்ட விளக்குகளை எரிய விடவும், குடிநீர் வசதிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3570/2018/இ1)

**தீர்மான எண். 111 நாள் 02.07.2018**

அனுமதிக்கப்பட்டது

9) மேட்டூர் நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் உள்ள சின்ன பார்க் என்றழைக்கப்படும் காமத் பூங்காவில் சேகரிக்கப்படும் குப்பைகளை தொட்டிகள் அமைத்து அதில் குப்பைகளை கொட்டி மக்க வைத்து எருவாக பயன்படுத்தலாம் என 14.05.2018 அன்று சேலம் மண்டல நகராட்சிகளுக்கான ஆய்வு கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி சின்னபார்க்கில் 2 தொட்டிகள் அமைத்து தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.98,000/- ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 112 நாள் 02.07.2018**

அனுமதிக்கப்பட்டது

10) இந்நகராட்சிக்கு சொந்தமான IDSMT திட்டத்தில் கட்டப்பட்டு புகைவண்டி நிலைய தினசலி மார்க்கெட் கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு 28.06.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண் 31க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்டுகிறது.

| வ எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிக பட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1 | திருமதி பி சுமதி மேட்டூர் ஆர் எஸ் | ரூ.8750/- |
| 2 | திரு பி பிரவீன் சாம்பள்ளி மேட்டூர் | ரூ.8600/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி கடை எண் 31க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள திருமதி பி சுமதி மேட்டூர் ஆர் எஸ் என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்று வாடகையாக ரூ.8750/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள தொகையானது ஏற்கனவே இருந்த வாடகையை விட ரூ.200/- கூடுதலாக உள்ளது. இக்கடைக்கு இதுவரை சுமார் 3 முறை மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்படும், இதுவரை ஏலமோ, ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோரவில்லை. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி அதிகபட்சமாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மான எண். 113 நாள் 02.07.2018**

அனுமதிக்கப்பட்டது

**11)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் வாகன எண். TN 52 T 8604 பழுது பணிகள் மேற்கொடு தகுதிச்சான்று புதுப்பித்தல் பணிக்கு ரூ.**0.83** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **30.04.2018** ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர். இலட்சுமி, ஆ ட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.**82650/–** | – |
| 2 | திருவாளர். J.V.K ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.**83650/–** | – |

***<u>அலுவலக குறிப்பு:</u>***

1. செலவினம் ரூ.**83000/–** வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோயதை மன்றம் ஏற்கலாம்

2. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.82650/- என குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் ஏற்காம்.

**(ந.க.எண்.1644/2018/இ1)**

**தீர்மான எண். 114 நாள் 02.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

12) மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு I,II, IV மற்றும் மலேரியா பிரிவிற்கு 2018-2019 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்களை வாங்கி வழங்கவும், ஆடிபெருக்கு விழா சுகாதாரப் பணிகளுக்கு தேவைப்படும் கிருமி நாசினிகளை வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலக குறிப்பு:***

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3566/2018/எச்1)**

**தீர்மான எண். 115 நாள் 02.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

13) மேட்டூர் நகராட்சியில் பணிபுரியும் பல்வேறு பிரிவுகளை சார்ந்த பணியாளர்கள் 2018-2019 ம் ஆண்டிற்கு அலுவலக பணி மற்றும் பயிற்சிக்கு சென்று வருவதால் ஏற்படும் பயணப்படி செலவு தொகையினை நகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

***அலுவலக குறிப்பு:***

2018-2019 ம் ஆண்டிற்கான பயணப்படி செலவின தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.

**(ந.க.எண்.1042/2013/பி3(சி1) )**

**தீர்மான எண். 116 நாள் 02.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
# மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 16.07.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

மன்றப் பொருள்

1) மேட்டூர் நகராட்சியில் தன்னிறைவு திட்டம் 2017–18–ன் கீழ் சின்னபார்க் என்று அழைக்கப்படும் காமத் பூங்காவில் சுற்றுசுவர் அமைத்தல் பணிக்கு, ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் 06.07.2018 தேதியன்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர். M.P.P & Co |
| 2 | திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியினை ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம் அங்கீகிரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 12.07.2018 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர். M.P.P & Co | 5.61 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் | 0.13 % மதிப்பீட்டை விட குறைவு |

இப்பணிக்கு 06.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகள் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.13 % குறைவாக ஒப்பந்தபுள்ளி விகிதம் கொடுத்துள்ள திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு**

**4)** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1475 /2018/இ1)**

**தீர்மான எண். 117 நாள் 16.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**2)** மேட்டூர் நகராட்சியில் தன்னிறைவு திட்டம் 2017–18–ன் கீழ் சின்னபார்க் என்று அழைக்கப்படும் காமத் பூங்காவில் குழந்தைகள் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல் பணிக்கு, ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் 06.07.2018 தேதியன்று கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர். M.P.P & Co |
| 2 | திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியினை ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 12.07.2018 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர். M.P.P & Co | 4.21 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு |

இப்பணிக்கு 06.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவாக ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1475–1 /2018/இ1)**

**தீர்மான எண். 118 நாள் 16.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**3)** மேட்டூர் நகராட்சியின் தன்னிறைவு திட்டம் **2017–18**–ன் கீழ் சின்னபார்க் என்று அழைக்கப்படும் காமத் பூங்காவில் நடைபாதை மற்றும் வண்ண பூஞ்செடிகள் அமைத்தல் பணிக்கு **ரூ.15.00** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் **06.07.2018** தேதியன்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர். M.P.P & Co |
| 2 | திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியினை ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் **12.07.2018** அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர். M.P.P & Co | **9.60** % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் | **0.08** % மதிப்பீட்டை விட குறைவு |

இப்பணிக்கு **06.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.08**% குறைவாக ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவாளர். ஆண்டவர் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு**

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1475 /2018/இ1)**

**தீர்மான எண். 119 நாள் 16.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**4)** மேட்டூர் நகராட்சியின் பொது சுகாதாரம் மற்றும் பொறியியல் பிரிவில் தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான குளோரின் சிலிண்டர் எடுத்து வரவும் அம்மா உணவகத்திற்கு தேவையான அரசி மூட்டை மற்றும் மளிகை பொருட்களை எடுத்து வரவும் நகராட்சி சாலைகளில் பள்ளமான பகுதிகளுக்கு கிராவல் மண் கொட்ட ஆகிய காரணங்களுக்காக மட்டுமே (குப்பை அள்ளுவதை தவிர்த்து) வாகன எண். TN 27 Y 2206 பயன்படுத்த வேண்டி உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் தகுதி சான்றினை புதுப்பிக்கவும், வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்யவும் மற்றும்

புதியதாக GPRS கருவியினை பொருத்தவும் ஆகும் செலவினத் தொகை ரூ.1,80,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

3) மன்றம் அனுமதிக்கலாம்.

4) இவ்வாகனம் குடிநீர் பணிகளுக்கு பயன்படுத்த உள்ளதால் இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3784/2018/இ1)

**தீர்மான எண். 120 நாள் 16.07.2018**

அனுமதிக்கப்பட்டது

5) மேட்டூர் நகராட்சி அலுவலக பின்புறம் உள்ள துப்பரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் பயன்படுத்தப்படும் அறைகளின் மேற்கூரை ஒடுகள் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் மேற்கண்ட அறைகளுக்கு மாற்றாக நகராட்சியின் தெற்குபுறமுள்ள பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தை பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எனவே தெற்குபுறமுள்ள பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் மராமத்து பணிகள் மேற்க்கொள்ளவும் மற்றும் மின்சார வசதி செய்யவும், பழுதடைந்த மேற்கூரை புதுப்பிக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

3) மன்றம் அனுமதிக்கலாம்.

4) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3922/2018/இ1)

**தீர்மான எண். 121 நாள் 16.07.2018**

அனுமதிக்கப்பட்டது

6) மேட்டூர் நகராட்சியில் காவேரி பாலம் புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ள MTC திரைஅரங்கின் மேற்கூரையில் பொருத்தப்பட்டு கீழே விழுந்துள்ள பழதடைந்த Truss மற்றும் Purlin போன்ற பழுதடைந்த இரும்பு பொருட்களை 13.07.2018 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது.

மேற்படி பொது ஏலத்தில் 5 நபர்கள் கலந்து கொண்டார்கள். இதில் உச்சபட்ச ஏலக் கேள்வித் தொகையாக திருமதி.அமுதா க/பெ. பெரியசாமி தூக்கனாம்பட்டி என்பவர் டன் ஒன்றுக்கு ரூ.23,300/–க்கு ஏலம் கோரியுள்ளார். மேற்கண்ட விலையின் அடிப்படையில் 15.29 டன்க்கு தொகை ரூ.3,56,257/– ஆகும். எனவே மேற்படி உச்சபட்ச ஏலத்தை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

4) மன்றம் அனுமதிக்கலாம்.

5) ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண்.3108/2018/இ1)

தீர்மான எண். 122 நாள் 16.07.2018

அனுமதிக்கப்பட்டது

7) இந்நகராட்சியில் சின்னபார்க் வளாகத்தில் onsite composting அமைப்பதற்கு ரூ.98,000/– ற்கு நகர்மன்ற தீர்மான எண்.112 நாள் 02.07.2018 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 28.06.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.இராமசாமி<br>ஒப்பந்ததாரர்<br>வனவாசி, மேட்டூர் | 0.10 % மதிப்பீட்டை<br>விட குறைவு |
| 2 | திரு.கே கோவிந்தன்,<br>ஒப்பந்ததாரர்<br>பூசாரிப்பட்டி, ஒமலூர் | 0.74 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு

**வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.10% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அறித்துள்ள திரு.ராமசாமி, ஒப்பந்ததாரர் வனவாகி அவர்களின் ஒப்பந்தபுள்ளியின் மன்றம் ஏற்கலாம்.**

(ந.க.எண்.2299/2018/இ1)

தீர்மான எண். 123 நாள் 16.07.2018

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 23.07.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

மன்றப் பொருள்

1) இந்நகராட்சியின் குடிநீர் நிதியின் கீழ், ஆடி 18 திருவிழாவிற்கு தற்காலிக கழிப்பறை, மின் விளக்கு மற்றும் குடிநீர் வசதிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.111 நாள்.02.07.2018–ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 19.07.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட இரு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்த புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.கோவிந்தன், ஒப்பந்ததாரர் ஓமலூர் | 2.16 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.ராமசாமி, ஒப்பந்ததாரர், மேட்டூர். | 0.20 % மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.20 % குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்துள்ள திரு.இராமசாமி, ஒப்பந்ததாரர் , மேட்டூர் அவர்களின் ஒப்பந்த புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 124 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

2) மேட்டூர் நகராட்சியில் தற்போது குடிநீர் வீட்டு இணைப்பில் சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்று பரிசீலிக்கப்பட்டு அதற்கான முன் வைப்பு தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் ஆகியவற்றினை செலுத்துமாறு விண்ணப்பதாரற்கு உரிய கேட்பு அனுப்பப்பட்டு சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் மேற்கூரிய தொகைகளை செலுத்திய உடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படும் நடைமுறை தற்போது வரை பின்பற்றப்பட்டு வருகிறது.

குடிநீர் திட்டங்களை முழுமையான திறனுக்கு இயக்கவும், அதன் பயன் அனைத்து பொது மக்களுக்கு உடனடியாக சென்று அடையவும், வீட்டு இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி நகராட்சி சாலைகள் வெட்டப்படுவதைக் தவிர்க்க வேண்டி குடிநீர் இணைப்பு வழங்குதலில் உள்ள நடைமுறையினை மாற்றி மேற்கண்ட முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்பு கட்டணங்களை சம்மந்தப்பட்ட வீட்டின் சொத்து வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணை முறையில் வசூல் செய்து கொள்ளவும் 21.03.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில்

தெரிவிக்கப்பட்டது கீழ்க்கண்டவாறு குடிநீர் விநியோக உப விதிகளை திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| குடிநீர் கட்டண வைப்பு தொகை | **Deposits for the provision of drinking water supply :-** |
|---|---|
| I. வீட்டு பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு ரூ5000/– | I. For each house connection for domestic purpose - Rs. 5000/- |
| II. வீட்டுப்பயன்பாடின்றி வணிக நோக்கு மற்றும் தொழிற்சாலைநோக்கு இணைப்பு ஒன்று =ரூ10000/– | II. For each connections for non-demostic, Commercial and Industrial Purpose – Rs. 10000/- |
| III. குடியிருப்புகளுக்கான புதிய குடிநீர் கட்டண வைப்புத்தொகை ரூ5000/–ஐ 10 சம தவணைகளில் செலுத்தலாம். அதாவது விண்ணப்பம் அளிக்கும் போது ஒரு தவணையும் மீதமுள்ள தொகையை 9தவணைகளில் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவேண்டும். | III. Deposit amount for only House service connection Rs.5000/- can be paid in 10 installments. 1st installment amount should be paid when the water supply connection application submitted to this office. Balance amount can be paid in 9 equal installments with in stipulated time. |
| IV குடியிருப்புக்கான சாலை பராமரிப்பு கட்டணம், மேற்பார்வை கட்டணம் மற்றும் குழாய் பதிப்பிற்கான கட்டுமான செலவு ஆகியவற்றுக்கான தொகையையும் முதல் தவணையை விண்ணப்பத்துடனும், மீதமுள்ள தவணைக்கான தொகைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டும் | IV. House Service connection Road Cutting charges, supervision charges and expenditure for laying of pipelines total amount can be paid in installments. 1st installment should be paid when the application submitted to this office. Other installments can be paid within stipulated time. |

மேற்கண்டவாறு குடிநீர் இணைப்பு வழங்கும் நடைமுறையில் முன் வைப்பு தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை சம்மந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்ய ஏதுவாக குடிநீர் விநியோகம் உப விதிகளை திருத்தம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி உபவிதிகள் திருத்தத்திற்கு ஒப்புதல் பெறலாம்.

**(ந.க.எண்.3855/2018/இ1)**

**தீர்மான எண். 125 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**3)** மேட்டூர் நகராட்சி, சேலம் மாவட்டத்திலுள்ள தேர்வு நிலை நகராட்சியாகும். நகராட்சியின் மக்கள் தொகை 2011–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 52813 ஆகும். நகராட்சியின் பரப்பளவு 14.55 சதுர கி.மீ மற்றும் மொத்தம் 30 வார்டுகள் கொண்டது ஆகும்.

இந்நகருக்கான முதல் குடிநீர் திட்டம் மேட்டூர் நகரியமாக இருந்த போது 1928ல் பொதுப்பணித்துறை மூலம் காவேரி ஆற்றில் இயல்பு நீரேற்று நிலையம் 50HP மோட்டார் நிறுவப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு 18.50 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக்குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம்

செய்யப்பட்டது. இத்திட்டத்தில் 18.00 இலட்சம் லிட்டர், 9.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட இரு நீர்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன. பின்பு 1975ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் மேம்பாட்டு திட்டத்தில் இயல்பு நீரேற்று நிலையம் 100HP மோட்டார், நீர் உந்து நிலையம் மற்றும் நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு 44.00 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக்குழாய்கள் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் 1.50 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டப்பட்டது. இத்திட்டங்களின் உச்சபட்ச வடிவமைப்பு அளவு (Designed Quantity) 9.30 MLD ஆகும்.

ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (UIDSSMT) கீழ் அரசாணை எண். 67 நாள்.20.07.2009–ல் ரூ.1247.19 இலட்சம் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு கூடுதலாக 3.00 MLD குடிநீர் பெறும் வண்ணம் பணிகள் முடிக்கப்பட்டு நகராட்சி வசம் 02/2016–ல் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 3.00 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 4.630 கி.மீ தூரமுள்ள பிரதான குழாய்கள், நான்கு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் (2.60 LL, 2.80 LL, 3.50 LL, 2.70 LL) மற்றும் 65.16 கி.மீ தூரத்திற்கு பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தற்சமயம் தினமும் 2.10 MLD குடிநீர் 29.06.2015 முதல் கிடைக்கப் பெறுகிறது. இத்திட்டத்தின் உச்சபட்ச வடிவமைப்பு அளவு (Designed Quantity) 3.85 MLD ஆகும்.

நகராட்சியின் பிரதான குடிநீர் ஆதாரம் மேட்டூர் அணையின் கீழ்பகுதியில் காவிரி ஆறு ஆகும். நபர் ஒருவருக்கு 135 லிட்டர் என்ற விகிதத்தில் நகராட்சியின் தினசரி குடிநீர் தேவை 71.30 இலட்சம் லிட்டர் ஆகும். கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தற்சமயம் இரு திட்டங்களின் மூலம் தினசரி 74.00 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 140 லிட்டர் என்ற அளவில் தினசரி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இரண்டு தரைமட்ட நீர்தேக்க தொட்டிகள் மற்றும் இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் ஆகியவற்றின் கொள்ளவு 40.10 இலட்சம் ஆகும். ஏழு குடிநீர் விநியோக மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நகரில் அனைத்து பகுதிகளுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் மேட்டூர் நகராட்சியில் 16902 சொத்துவரி விதிப்புகள் உள்ளது. இவற்றில் 7933 எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகள் உள்ளன.

மேலும் குடிநீர் குழாய் இணைப்பு பெறாத 7000 எண்ணிக்கையிலான குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் நகராட்சி மூலம் வழங்கி, அதற்காகும் செலவினத்தினை TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக (Interest free loan from revolving fund maintained by TUFIDCO) ரூ.232.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந..க.எண். 13277/2018/WS1 நாள். 19.06.2018ல் ரூ.232.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 13277/2018/WS1 நாள். 09.07.2018ல் கண்டுள்ளபடி 29.06.2018 அன்றைய ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டவாறு நகரில் தினசரி சீரான முறையில் அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான அழுத்தத்துடன் கூடிய விநியோக முறையாக (District Metering Area) குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதைய குடிநீர் விநியோக முறையை மேம்படுத்தி மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் மேலும் இதற்கான செலவினங்களை Project Development Grant Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4006/2018/இ1)

**தீர்மான எண். 126 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**4)** மேட்டூர் நகராட்சியில் தற்போது பாதாள சாக்கடை இணைப்பில் சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்று பரிசீலிக்கப்பட்டு அதற்கான முன் வைப்பு தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் ஆகியவற்றினை செலுத்துமாறு விண்ணப்பதாரற்கு உரிய கேட்பு அனுப்பப்பட்டு சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் மேற்கூரிய தொகைகளை செலுத்திய உடன் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படும் நடைமுறை தற்போது வரை பின்பற்றப்பட்டு வருகிறது.

பாதாள சாக்கடை இணைப்புகளை முழுமையான திறனுக்கு இயக்கவும், அதன் பயன் அனைத்து பொது மக்களுக்கு உடனடியாக சென்று அடையவும், பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி நகராட்சி சாலைகள் வெட்டப்படுவதைக் தவிர்க்க வேண்டி பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதலில் உள்ள நடைமுறையினை மாற்றி மேற்கண்ட முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்பு கட்டணங்களை சம்மந்தப்பட்ட வீட்டின் சொத்து வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணை முறையில் வசூல் செய்து கொள்ளவும் 21.03.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது கீழ்க்கண்டவாறு பாதாள சாக்கடை உப விதிகளை திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பாதாள சாக்கடை வைப்பு தொகை

| வீட்டின் பரப்பளவு | வைப்புத் தொகை | | மாதக்கட்டணம் | |
|---|---|---|---|---|
| | வீட்டு உபயோக இணைப்பு | வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பு | வீட்டு உபயோக இணைப்பு | வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பு |
| 500.ச.அடிக்கு குறைவு | 5000 | 10000 | 85 | 170 |
| 500–1200 ச.அடி | 7000 | 13500 | 86 | 285 |
| 1200–2400 ச.அடி | 10000 | 18000 | 110 | 330 |
| 2400 ச.அடிக்கு மேல் | 12000 | 35000 | 120 | 360 |

மேற்கண்டவாறு வைப்புத் தொகை மற்றும் மேற்பார்வை கட்டணம் இணைப்பு வழங்குவதற்கான கட்டுமான செலவு முதலிய அனைத்தும் 10 சம தவணைகளில் செலுத்தலாம். அதாவது விண்ணப்பம் அளிக்கும் போது ஒரு தவணையும் மீதமுள்ள தவணைக்கான தொகைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவேண்டும்

**Deposits for the provision of Under Ground Drainage :-**

| Area of the Site | Deposit Amount | | Monthly Amount | |
|---|---|---|---|---|
| | Domestic | Non Domestic | Domestic | Non Domestic |
| Below 500. Sqf | 5000 | 10000 | 85 | 170 |
| 500–1200 Sqf | 7000 | 13500 | 86 | 285 |
| 1200–2400 Sqf | 10000 | 18000 | 110 | 330 |
| Above 2400 Sqf | 12000 | 35000 | 120 | 360 |

The above deposit amount, supervision charges and construction expenditure for providing connection were can be paid in 10 installments. 1st installment amount should be paid when the Under Ground Drainage connection application submitted to this office. Other installments can be paid in with stipulated time.

மேற்கண்டவாறு பாதாள இணைப்பு வழங்கும் நடைமுறையில் முன் வைப்பு தொகை கட்டுமான செலவு மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை சம்மந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்ய ஏதுவாக பாதாள சாக்கடை உப விதிகளை திருத்தம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி உபவிதிகள் திருத்தத்திற்கு ஒப்புதல் பெறலாம்.

(ந.க.எண்.4007/2018/இ1)

**தீர்மான எண். 127 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

5) மேட்டூர் நகராட்சி அலுவலக பிரிண்டர்களுக்கு டோனர் சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ3.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.04.2018 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.ஸ்பைடர் டெக்னாலஜி, சேலம் | – | 0.26 % சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர். டி.சி.பிரிண்டர் சேலம் | – | 0.52 % சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

*__அலுவலக குறிப்பு:__*

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.26 % சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.ஸ்பைடர் டெக்னாலஜி, சேலம் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

(ந.க.எண். 1120/இ1/2018)

**தீர்மான எண். 128 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

6) இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் TN 52 W 5972-ன் தகுதி சான்று புதுப்பித்தல் மற்றும் பழுதுகளை சரிசெய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ0.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 19.07.2018 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் | ரூ.79,000/– | குறைவு |
| 2 | திருவாளர்.J.V.K ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் | ரூ.79,000/– | அதிகம் |

*அலுவலக குறிப்பு:*

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.79000/– என குறைவாக ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். இலட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண். 3444/இ1/2018)**

**தீர்மான எண். 129 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**7)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் TN 52 S 2041-ன் தகுதி சான்று புதுப்பித்து வாகனத்தின் பழுதுகளை சரி செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ**0.70** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **19.07.2018** ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் | ரூ.69,000/– | குறைவு |
| 2 | திருவாளர்.J.V.K ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் | ரூ.72,000/– | அதிகம் |

*அலுவலக குறிப்பு:*

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.69000/– என குறைவாக ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். இலட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண். 3418/இ1/2018)**

**தீர்மான எண். 130 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**8)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் TN 52 W 5972-ன் அனைத்து டயர்கள் மற்றும் டியுப்கள் புதியதாக மாற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ**0.68** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **19.07.2018** ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.68,000/– | குறைவு |
| 2 | திருவாளர்.J.V.K ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.72,000/– | அதிகம் |

*__அலுவலக குறிப்பு:__*

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.68000/– என குறைவாக ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண். 2602/இ1/2018)**

**தீர்மான எண். 131 நாள் 23.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

<u>நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனிஅலுவலர் அவர்களால் 31.07.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

<u>மன்றப் பொருள்</u>

1) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2018 ஆம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

*<u>அலுவலக குறிப்பு:</u>*

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 132 நாள் 31.07.2018**

## பதிவு செய்யப்பட்டது

2) இந்நகராட்சியில் TN 27 W 7915 பொறியியல் பிரிவு குடிநீர் வாகனத்தின் தகுதிச் சான்று புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 06.07.2018 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.லட்சுமிஆட்டோடீசல் ஒர்க்ஸ் | ரூ.79,000/– | குறைவு |
| 2 | திருவாளர். J.V.K ஆட்டோடீசல் ஒர்க்ஸ் | ரூ.82,000/– | அதிகம் |

*<u>அலுவலக குறிப்பு:</u>*

1) வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.79000/– என குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதிமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 3346/இ1/2018)**

**தீர்மான எண். 133 நாள் 31.07.2018**

அனுமதிக்கப்பட்டது

3) அரசாணை எண்.(MS) 73 நநி (ம) கு.வ (MAIV) நாள்.19.07.2018ல் சொத்துவரி பொது சீராய்வு 2018–19- I (01.04.2018) முதல் மாநகராட்சிகள் /நகராட்சிகள் /மூன்றாம் நிலைநகராட்சிகள்/ பேரூராட்சிகள் மேற்கொள்ள கீழ்கண்டுள்ளவாறு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

| வ.எண். | உபயோகம் | பொது சீராய்வில் திருத்தம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள சொத்துவரி உயர்வு விகிதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு இல்லாத கட்டிடங்கள் | 100% மிகாமல் |

அரசாணைமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

3) அரசாணையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
4) அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்
5) பொதுசீராய்வு 2018–19ல் மேற்கொண்டுள்ளது குறித்து நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4152/2018/அ1)**

**தீர்மான எண். 134 நாள் 31.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

4) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மழைமற்றும் காற்றின் காரணமாக கீழே விழுந்துள்ள மரக்கிளைகள் மற்றும் நகராட்சி தார் சாலை ஓரங்களில் விழுந்துள்ள மரக்கிளைகள் சேகரம் செய்யப்பட்டு மரக்கிளைகளை 20.07.2018 அன்று ஏலம் விடப்பட்டது.

மேற்படி பொது ஏலத்தில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் உச்சபட்ச கேள்வித் தொகையாக திரு.செல்வம் த/பெ. ஆறுமுகம், மாதையன்குட்டை என்பவர் ரூ.2800/–க்கு ஏலம் கோரியுள்ளார். எனவே மேற்படி ஏலத்தை உறுதி செய்வதை குறித்துப் பொது ஏலம் விடப்பட்டதால் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஏலம் மற்றும் உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.634/2018/இ1)**

**தீர்மான எண். 135 நாள் 31.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

5) இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்டபகுதியில் ஆடி பெருக்கு( ஆடி18 மற்றும் ஆடி28) ஆகிய இரண்டு நாட்கள் திருவிழா காலத்தில் பாதை ஓரங்களில் கடை வைப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 20.04.2018ல் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலத்தில்கலந்துகொண்டவர்கள்பெயர் | ஏலக்கேள்வியில்கோரியஅதிகபட்சதொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திரு.ஜி.செல்வநாதன்<br>த/பெ.காந்தி,<br>15/3, மேற்குமெயின் ரோடு,<br>சதுரங்காடி, மேட்டூர் அணை. | ரூ.19,000/- |
| 2. | திரு.எம்.சுரேஷ்<br>த/பெ.முத்து,<br>காவேரிபாலம்,<br>மேட்டூர் அணை. | ரூ.13,200/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1—ல் கண்டுள்ள திரு.ஜி.செல்வநாதன், மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.19,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.588/— கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியைவிட ரூ.1451/— கூடுதலாகவும் உள்ளது. எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவுசெய்யலாம்.

<u>(ந.க.எண்.3928/2007/அ2)</u>

**தீர்மான எண். 136 நாள் 31.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

6) ஆடி18 ஆம் தினத்தன்று (03.08.2018) இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட அரசுமேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் சைக்கிள், இரு சக்கர வாகனங்கள், கார் மற்றும் கனரகவாகனங்கள் நிறுத்துபவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 31.07.2018 ஆம் தேதி குறுகியகால பொது ஏலம் கோரப்பட்டதில், ஏலத்தில் 74 ஏலதாரர்கள் கலந்து கொண்டதில் ஏலம் கோரியவர்கள் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலத்தில்கலந்துகொண்டவர்கள்பெயர் | ஏலக்கேள்வியில்கோரியஅதிகபட்சதொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.தணிகாசலம்<br>த/பெ.ரங்கசாமி,<br>குள்ளவீரன்பட்டி, மேட்டூர் அணை. | ரூ.82,500/- |

| | | |
|---|---|---|
| 2. | திரு.ஜி.செல்வநாதன்<br>த/பெ.காந்தி,<br>15/3, மேற்குமெயின் ரோடு,<br>சதுரங்காடி, மேட்டூர் அணை. | ரூ.83,000/- |
| 3. | திரு.சி.சந்திரசேகர்,<br>த/பெ.சென்னகேசவன்,<br>24/88C7, EB சென்ட்ரல் ஆபிஸ் எதிரில்,<br>மேட்டூர். | ரூ.83,500/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி கோரப்பட்டுள்ள மூன்று ஏலக்கேள்விகளில் வரிசை எண்.3—ல் கண்டுள்ள திரு.சந்திரசேகர், மேட்டூர் அணைஎன்பவர் அதிகபட்சமாக ரூ.83,500/-க்கு ஏலம் கோரியுள்ளார். இந்த ஏலக் கேள்வியானது சென்ற ஆண்டைவிட ரூ.1,813/-குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.10,971/- கூடுதலாகவும் உள்ளது. எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவுசெய்யலாம்.

**<u>(ந.க.எண்.3928/2007/அ2)</u>**

**தீர்மான எண். 137 நாள் 31.07.2018**

அனுமதிக்கப்பட்டது

7) இந்நகராட்சியின் 12.11.2016 முதல் கணக்காளர் பணியிடம் காலியாக உள்ளதால், 2016—17 ஆம் ஆண்டுக்கான ஆண்டு கணக்கினை அலுவலக பணியாளரை கொண்டு முடிக்க இயலாததால், கணினியில் கணக்கினை தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்திட தனியரை நியமித்துக் கொள்ளவும் (Consultant) அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4297/2018 /பி1)**

**தீர்மான எண். 138 நாள் 31.07.2018**

அனுமதிக்கப்பட்டது

8) இந்நகராட்சியின் குடிநீர் நிதியின் கீழ் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள அறைகளில் பெயிண்ட் மற்றும் நுழைவாயில் பழுதடைந்த இரும்பு கதவை மாற்றி அமைக்கவும். மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.51, நாள்.28.03.2018—ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 31.07.2018—ல் ஒப்பந்த புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட இரு ஒப்பந்த புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயர் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திருவாளர்.N.R & கோ<br>ஒப்பந்ததாரர், மேட்டூர் | 0.20 % மதிப்பீட்டை விட<br>குறைவு |
| 2 | திருவாளர். C.P சாமி & கோ,<br>கோனூர், மேட்டூர் | 1.96 % மதிப்பீட்டை விட<br>அதிகம் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்த புள்ளியாக மதிப்பீட்டைவிட 0.20% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளர். N.R & கோ மேட்டூர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1187/2018 /இ1)**

**தீர்மான எண். 139 நாள் 31.07.2018**

அனுமதிக்கப்பட்டது

9) இந்நகராட்சியின் குடிநீர் நிதியின் கீழ் சீத்தாமலை பகுதியில் உள்ள உயர்மட்ட நீர்தேக்க தொட்டி வளாகத்தில் இருப்புஅறை அமைத்து, சுற்று சுவரினை சீர் செய்து, மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.52, நாள்.28.03.2018–ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 31.07.2018–ல் ஒப்பந்த புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட இரு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்த புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயர் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|
| 1 | திருவாளர்.கிருத்திகா<br>கன்ஷ்ட்ரக்ஷன், மேட்டூர் | 1.80 % மதிப்பீட்டை விட<br>அதிகம் |
| 2 | திருவாளர். C.P சாமி & கோ,<br>கோனூர், மேட்டூர் | 0.24 % மதிப்பீட்டை விட<br>குறைவு |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்த புள்ளியாக மதிப்பீட்டைவிட 0.24% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளர். C.P சாமி & கோ, மேட்டூர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.1187–1/2018 /இ1)**

**தீர்மான எண். 140 நாள் 31.07.2018**

அனுமதிக்கப்பட்டது

10) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் மின் பணியாளர் நிலை– Iல் பணிபுரிந்து 31.03.2018–ல் ஓய்வு பெற்ற திரு.எம்.ராஜன் என்பவர் மின் பணியாளர் நிலை–I ஆக பணி நியமனம் செய்ததை குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.No.28979/2017 தொடர்பாக வழக்கில் வரப்பெற்ற தீர்ப்பின்படி நீதி மன்ற அவமதிப்பு C.P.No.1574/2018 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் வாதாட திரு.J.புருஷோத்தமன், அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் அவர்களை வைத்துக் கொள்ளவும், மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினம் முடிவிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4489/2017 /இ1)**

**தீர்மான எண். 141 நாள் 31.07.2018**

அனுமதிக்கப்பட்டது

11) இந்நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் 8800 எண்ணிக்கையிலான வீட்டு சேவை இணைப்புகள் வழங்குதல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.9997/2018/UGSS நாள்.23.05.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.18281/2016/DO1 நாள்.31.05.2018–ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 04.06.2018–ல் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு 11.07.2018–ல் முதல் முறை ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டது. இரண்டு ஒப்பந்த புள்ளிகளை நகராட்சியின் ஒப்பந்தபுள்ளி கூர்ந்தாய்வு குழுவால் கூர்ந்தாய்வு செய்ததில் திரு.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் மேச்சேரி, சேலம் அவர்களின் ஒப்பந்தபுள்ளி தகுதிபெறவில்லை. ஒப்பந்தபுள்ளி கூர்ந்தாய்வு குழுவால் தகுதிபெற்ற ஒப்பந்தபுள்ளியாக திருவாளர். K.S.P & Co கோனூர், மேட்டூர் அவர்களின் விலைவிகித பட்டியலை 19.07.2018–ல் திறக்க அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு ஒப்பந்ததாரரர் முன்னிலையில் விலைவிகித பட்டியல் திறக்கப்பட்டது. அதன் விபரம்

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்.K.S.P & Co கோனூர், மேட்டூர் | 12.47 % மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 12.47 % கூடுதலாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளதால் ல்வலை குறைப்பு செய்து தர கோரி 19.07.2018–ல் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 20.07.2018–ம் தேதிய கடிதத்தில், மேற்கண்ட பணி 8800 வீடுகளுக்கு தனி தனியாக கட்டுமான பொருட்களை கொண்டு சென்று அதிகப்படியான லேபர்களை வைத்து செய்ய வேண்டிய பணி எனவும், பணிக்கு 2017–2018ம் ஆண்டின் PWD மற்றும் TWAD SOR – னை கொண்டு தயார் செய்யப்பட்டு டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும், தற்போது PWD SOR 2018–19–ம் ஆண்டிற்கு விலை உயர்த்தபட்டுள்ளதால் இதற்கு மேல், தன்னால் விலை குறைத்து தர இயலாது என்பதனை தெரிவித்துள்ளார்.

எனவே ஒப்பந்ததாரர், விலை குறைப்பு செய்து தராததால், ஒப்பந்ததாரர் திருவாள. K.S.P & Co கோனூர், மேட்டூர் அவர்களின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டைவிட 12.47% அதிகமாக உள்ளது. இதனை ஏற்க இயலாது. எனவே ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியை ரத்து செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மதிப்பீட்டை விட 12.47% கூடுதலாக ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியை ரத்து செய்து மறு ஒப்பந்தபுள்ளி கோரலாம்.

**(ந.க.எண்.686/2018 /இ1)**

**தீர்மான எண். 142 நாள் 31.07.2018**

<u>அனுமதிக்கப்பட்டது</u>

12) இந்நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் 1200 எண்ணிக்கையிலான வீட்டு சேவை இணைப்புகள் வழங்குதல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.9997/2018/UGSS நாள்.23.05.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.18281/2016/DO1 நாள்.31.05.2018–ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 04.06.2018–ல் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு 11.07.2018–ல் முதல் முறை ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டது. இரண்டு ஒப்பந்த புள்ளிகளை நகராட்சியின் ஒப்பந்தபுள்ளி கூர்ந்தாய்வு குழுவால் கூர்ந்தாய்வு செய்ததில் திரு.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் மேச்சேரி, சேலம் அவர்களின் ஒப்பந்தபுள்ளி தகுதிபெறவில்லை. ஒப்பந்தபுள்ளி கூர்ந்தாய்வு குழுவால் தகுதிபெற்ற ஒப்பந்தபுள்ளியாக திருவாளர். K.S.P & Co கோனூர், மேட்டூர் அவர்களின் விலைவிகித பட்டியலை 19.07.2018–ல் திறக்க அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு ஒப்பந்ததாரரர் முன்னிலையில் விலைவிகித பட்டியல் திறக்கப்பட்டது. அதன் விபரம்

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்.K.S.P & Co கோனூர், மேட்டூர் | 12.47 % மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 12.47 % கூடுதலாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளதால் ல்வலை குறைப்பு செய்து தர கோரி 19.07.2018–ல் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 20.07.2018–ம் தேதிய கடிதத்தில், மேற்கண்ட பணி 8800 வீடுகளுக்கு தனி தனியாக கட்டுமான பொருட்களை கொண்டு சென்று அதிகப்படியான லேபர்களை வைத்து செய்ய வேண்டிய பணி எனவும், பணிக்கு 2017–2018ம் ஆண்டின் PWD மற்றும் TWAD SOR – னை கொண்டு தயார் செய்யப்பட்டு டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும், தற்போது PWD SOR 2018–19–ம் ஆண்டிற்கு விலை உயர்த்தபட்டுள்ளதால் இதற்கு மேல், தன்னால் விலை குறைத்து தர இயலாது என்பதனை தெரிவித்துள்ளார்.

எனவே ஒப்பந்ததாரர், விலை குறைப்பு செய்து தராததால், ஒப்பந்ததாரர் திருவாள. K.S.P & Co கோனூர், மேட்டூர் அவர்களின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டைவிட 12.47% அதிகமாக உள்ளது. இதனை ஏற்க இயலாது. எனவே ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியை ரத்து செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மதிப்பீட்டை விட 12.47% கூடுதலாக ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியை ரத்து செய்து மறு ஒப்பந்தபுள்ளி கோரலாம்.

**(ந.க.எண்.686/2018 /இ1)**

**தீர்மான எண். 143 நாள் 31.07.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி